மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கலை 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 03 புதன்கிழமை (15 – 02– 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 83

# தேசியத் தலைவரை நேரில் சந்திப்பாராம் வாசுதேவ!

## கொழும்பில் அவரே தகவல்



கொழும்பு, பெப். 15

சமாதானத் தூதுக்குழுவில் இடம்பெற்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரும் இரத்தினபுரி மாவட்ட எம். பியான வாசுதேவ நாணயக்காரா மற்றும் வை. பி. டி. சில்வா ஆகியோர் அன்றைய தினமே தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்து சமாதானம் தொடர்பான தமது மகஜரைக் கையளிப்பர்.

இதற்கான அனுமதியை தலைவர் தங்களுக்கு வழங்கியுள்ளதாக வாசுதேவ நாணயக்காரா கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சமாதானத்தை விரும்பும் மக்கள் தொடர்பானதே எமது செய்தி. அதனையே நாம் திரு பிரபாகரனிடம் கையளிக்க உள்ளோம் எமது யாழ். விஜயத்தை பிரபாகரன் வரவேற்றுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)



# சமாதான பேச்சு மீண்டும் விரைவில் ஆரம்பமாகும்!

## கொழும்பில் வெளியான தகவல்

கொழும்பு, பெப்ரவரி 15

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் இன்னும் பத்து நாட்களில் ஆரம்பிக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக ஆளும் கட்சிக்கு நெருக்கமான — தமிழ் அரசியல் கட்சியின் — எம். பி. ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பதற்ற நிலையைக் குறைப்பதற்கு தயாராக இருப்பதாக அரசியல்வாதிகள் மற்றும் விமர்சகர்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

நெருக்கடிக்குக் காரணமான பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்றும்—

இரு தரப்பும் தமது கடும்போக்கைத் தளர்த்திக் கொள்ளும் அறிகுறிகள் தெரிவதாகவும் —

மேற்படி தமிழ் எம். பி. தெரிவித்ததாக வெரித்தாஸ் மற்றும் சிங்கப்பூர் வானொலிகள் அறிவித்தன.

## "ஜே. வி. பிக்காரராக மாறுவோம்"

# அரச தரப்பு எம்.பி. அரசுக்குச் சவால்!

கொழும்பு, பெப். 15

"நாம் ஐக்கிய தேசியக் கட்சியினராக மாறமாட்டோம். ஆனால் ஜே.வி.பியினராக நாம் மாறமுடியும். இதனை மறந்து விடாதீர்கள்.

கொழும்பு மாவட்ட அரசு எம். பி. ஒருவர் இவ்வாறு எச்சரித்திருப்பதாக 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

கடந்த வாரம் நடந்த அரசாங்க நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வு பற்றி குழுக்கூட்டத்தில் அச்சமயம் உறுப்பினர்கள் விவாதித்துக் கொண்டிருந்தனர். (இ-எ)

# "குளோரின்" வாயுக் கசிவு! 75 பேர் ஆஸ்பத்திரியில்!!

## பலாங்கொடையில் சம்பவம்

கொழும்பு, பெப். 15

பலாங்கொடையில் உள்ள "லங்கா வோல் ரைல்ஸ்" என்ற நிறுவனத்துக்கு அருகில் உள்ள களஞ்சியத்தில் நேற்று பெரும் குளோரின் வாயுக் கசிவு ஏற்பட்டதை அடுத்து அந்த நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 75 ஊழியர்கள் சுவாசக் கோளாறுக்கு இலக்கானார்கள்; அவர்கள் அவசர சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அந்தப் பகுதி முழுவதற்கும் வாயு பரவிவருவதால் விசாரணைகள் தடைப்பட்டுள்ளன என்று இரத்தினபுரி பொலீஸ் அதிபர் தெரிவித்துள்ளார்.

# ஆர்ப்பாட்டப் பேரணி திங்களன்று நடக்கும்

யாழ்ப்பாணம், பெப். 15

அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டப்பேரணி வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அனைத்து வெகுஜன அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பேரணி வரும் திங்கட்கிழமை நடைபெறவிருப்பதாக யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் திரு. கு. சிறில் தெரிவித்தார்.

# ஜனாதிபதி செயலகம் முன் படம் பிடித்த 3தமிழர் கைது

கொழும்பு, பெப். 15

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னே நின்று புகைப்படம் பிடித்த — மாத்தளையைச் சேர்ந்த — மூன்று தமிழ் இளைஞர்களை ஜனாதிபதி செயலக பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்து இரகசியப் பொலீஸாரிடம் கையளித்தனர்.

இம்மூவரும் கிருலப்பனையில் உள்ள — பொட்டலங்களில் உப்பு அடைக்கும்— நிலையமொன்றில் தொழில் புரிபவர்கள் என்று விசாரணையின்போது தெரியவந்தது.

இவர்கள் எடுத்த படச்சுருளை கழுவிப் பார்த்த போது படங்களில் ஜனாதிபதி செயலகக் கட்டடமும், அதற்கு அருகில் இருந்த ஒரு கட்டடமும், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும், பேரை ஆற்றின் ஒரு பகுதியும் காணப்பட்டதாகவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவரின் சகோதரனது பிறந்த தினத்தின் போது படங்கள் எடுப்பதற்காக மேற்படி கமராவை களுத்துறையிலுள்ள நண்பர் ஒருவரிடமிருந்து இரவல் வாங்கியதாக சந்தேக நபர்கள் விசாரணையின்போது தெரிவித்தனராம். (உ-5-77)

# பொலீஸ் மா அதிபரை பதவி நீக்கக் கோரிக்கை

கொழும்பு, பெப். 15

பொலீஸ் மா அதிபர் திரு. பிராங்க் டீ சில்வாவை அந்தப் பதவியில் இருந்து அகற்றும்படி ஜனாதிபதியை அரச எம்.பிக்கள் பலர் கேட்டுள்ளனர்.

அரச உத்தரவுகளை அமுல் நடத்தத் தவறியதற்காகவே பொலீஸ் மா அதிபர் பதவி நீக்கஞ்செய்யப்பட வேண்டும் என்று அந்த எம். பிக்கள் சந்திரிகாவைக் கோரியுள்ளனர் என்று "சண்டே ஐலண்ட்" ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

நடத்தப்பட்ட விசாரணைகள் பொலீஸ் மா அதிபர் தரப்பில் பல தவறுகள் இடம் பெற்றுள்ளன என்றும் அரச எம்.பிக்கள் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். [உ-எ]

# "சீ டான்சர்" கப்பல் நாளை இங்கு வருகிறது

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடவுள்ள கப்பலான 'சீ டான்சர்' நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

இதில் யாழ். பிராந்திய சுகாதார நிலையத்துக்குத் தேவையான மருந்து வகைகள் எடுத்து வரப்படுகின்றன.

இக்கப்பல் முன்னர் நோயாளர்களை ஏற்றி இறக்கிய 'பிளாம்பயன்' கப்பலுக்குப் பதிலாகவே [illegible] படுத்தப்படவுள்ளது.

இக்கப்பலில் இங்கிருந்து வெளியூர் தபால்கள் எடுத்துச் செல்லப்படும். இம்முறை மட்டக்களப்புக்கும் தனியான தபாற்பொதி ஒன்று அனுப்பப்பட உள்ளது.

இக்கப்பல் மூலம் தபால்களை வெளியூருக்கு அனுப்ப விரும்புவர்கள் அவற்றை இன்று மாலை 4 மணிக்கு முன்னதாக பிரதம தபாலகப் பெட்டியில் சேர்க்கலாம்.

"சீ டான்சர்" கப்பலில் கொழும்பிலிருந்து தபால் பொதிகளை இங்கு எடுத்து [illegible] இதனை பிரதம தபாலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பேரணி பற்றிய கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், பெப். 15

எதிர்வரும் திங்கட்கிழமை 20 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதி ஏற்பாடுகளை ஆராய்வதற்கான கலந்துரையாடல் இன்று பி. ப. 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

குடாநாட்டில் உள்ள வெகுஜன அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது. [அ-4]

## முச்சந்தி முரசு



அடிக்கடி சட்சி மாறுகிற பட்சி எலலோ...... அதுதான் மெல்ல மாறப் பாக்கிறார மெல்...!

# "சோஷலிச" என்ற சொல்லை அகற்றுவதற்கு மறுத்தார் சந்திரிகா

## பட்ஜெட் உரைக்கு முன் நிகழ்ந்த சம்பவம்

கொழும்பு, பெப். 15

ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசு என்ற சொற்றொடரில் இருந்து 'சோஷலிச' என்ற வார்த்தையை அகற்றும்படி விடுக்கப்பட்ட ஆலோசனையை ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் வரவு செலவுத் திட்ட உரையை பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் நிகழ்த்துவதற்கு சில மணித்தியாலங்கள் முன்பதாக, அமைச்சரவைக் கூட்டத்தில் வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெறும் அம்சங்கள் விரிவாக ஆராயப்பட்டன. கூட்டம் முடிவடையும் தருணத்தில், ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து குறிப்பு ஒன்றைக் கையளிக்க அவரது அந்தரங்கச் செயலாளர் இந்திரா பெர்னாண்டோ பரபரக்க ஓடிவந்தார்.

அந்தக் குறிப்பை ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் டாக்டர் லால் ஜெயவர்த்தனா அனுப்பி இருந்தார்

வரவு செலவுத்திட்ட உரையில் இருந்து ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசு என்ற சொற்றொடரில் உள்ள "சோஷலிச" என்ற வார்த்தையை அகற்ற வேண்டும் என்றும் —

சோஷலிசம் என்ற வார்த்தை இருப்பின் அது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தை அளிக்காது என்றும் அந்த குறிப்பில் எழுதப்பட்டிருந்தது.

குறிப்பை வாசித்த ஜனாதிபதி சந்திரிகா சிறிது நேரம் என்ன செய்வது என்று அறியாது திகைத்து நின்றார். பின்னர்,

[6 ஆம் பக்கம் பார்க்க]

# அரசுக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்க றொனி டி மெல் தயார்!

கொழும்பு, பெப். 15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு நிபந்தனையுடனான ஒத்துழைப்பு வழங்க முன்னாள் நிதி அமைச்சரும் மாத்தறை மாவட்ட ஐ.தே.கவின் எம். பியுமான றொனி டி மெல் முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது இந்த நிலையை றொனி டி மெல் பொ.ஐ.மு. தலைமைப் பீடத்துக்கு ஏற்கனவே தெரிவித்து விட்டதாக 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

தம்மை ஓர் ஆலோசகர் ஆக அங்கீகரிக்க அரசாங்கம் முன்வருமானால் அரசுக்கு தமது ஒத்துழைப்புக் கிடைக்கும் என்பது றொனி டி. மெலின் நிபந்தனையாகும்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, பிரிட்டனில் உள்ள நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி 'உதவி'களைப் பெறுவதற்குத் தாம் உதவ முடியும் என்றும் றொனி

[6 ஆம் பக்கம் பார்க்க]

# அரசுத்தரப்பு எம். பிக்கள் பட்ஜட் குறித்து அதிருப்தி!

கொழும்பு, பெப். 15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடந்த வாரம் சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டம் குறித்து அரசதரப்பு எம்.பிக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற அரசதரப்பு எம். பிக்களின் கூட்டத்திலேயே இந்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டம் குறித்து கலவரமடைந்து காணப்பட்ட அரசுத் தரப்பு எம்.பிக்கள், அது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிவித்தனர்.

உர மானியத்தை விலக்கிக் கொள்ளும் முடிவை வாபஸ் பெறுமாறு அவர்கள் கோரினர். அக்கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதாக ஜனாதிபதி அங்கு கூறினார்.

# அரசமைப்புத் தெரிவுக்குழு அடுத்த வாரம் கூடும்

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு இம்மாதம் 21 ஆம், திகதி மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

நாடாளுமன்றத்துக்கு வெளியே அரசியல் கட்சிகள் தனித்தனியாகக் கூடி அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக விவாதித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பு மாற்றம் தொடர்பாக இன்னொரு சுற்றுப் பேச்சுக்களை சில தமிழ்க் கட்சிகள் இன்று (புதன்) நடத்துவதாக உள்ளன என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

# எம் பிக்கள் எண்ணிக்கை: 245ஆக உயர்த்த அரசு முடிவு

புதிய அரசமைப்பின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 245 ஆக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

தொகுதி வாரி விகிதாசாரத் தேர்தல் முறை திருத்தப்பட்ட முறையில் தொடர்ந்து பேணப்படும்.

தற்போது எம். பிக்களின் எண்ணிக்கை 225ஆகும் இந்த எண்ணிக்கை புதிய அரசமைப்பில் மேலும் இருபதால் அதிகரிக்கப்படும்.

நாட்டில் உள்ள 160 தேர்தல் பிரிவுகளில் இருந்து ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றவர் என்ற அடிப்படையில் எம். பிக்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் அவர் கூறினார். [உ-எ]

## கொட்டாஞ்சேனையில்

# தமிழ் வர்த்தகர் வீட்டில் இரகசியப் பதுங்கு குழி!

கொழும்பு, பெப். 15

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் பெரியவீடொன்றில் இரகசியப் பதுங்குகுழி ஒன்று இருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அந்த வீட்டைப் பொலீஸார் சோதனையிட்ட போது ஆறு அடி நீள அகலத்தையும் ஐந்து அடி ஆழத்தையும் உடைய பதுங்குகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

அந்த வீடு கட்டப்படும் போதே படுக்கை அறைக்குள் பதுங்குகுழி கட்டப்பட்டதாகவும் —

பதுங்குகுழியின் நிலப்பரப்பிற்கு 'ரெற சோ' போடப்பட்டிருப்பதாகவும் —

அதற்குள் பாவித்த நிலையில் ஒரு கட்டில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் உள்ள சில பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகவே பதுங்குகுழி அமைக்கப்பட்டதாக அந்தத் தமிழ் வர்த்தகர் கூறிய போதிலும், அதில் திருப்தியடையாத பொலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்தது. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

அடை வைக்க உகந்த பிறாமா, செல்க்கி, பாபடி கல்ஸ், சில்வர், பிறேசில், பாமாஸ், போலீஸ் முட்டைகளும், 3 மாதக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. யோ. மாறன், தவக்குமார் வீதி, மடத்தடி தூபி அருகில், சங்கத்தானை, சாவகச்சேரி. (8239)

ஐந்து நாட்கள் வளர்ச்சியடைந்த Christombu Farm சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 22/- மட்டுமே. தொடர்பு: இல. 9, றக்கா வீதி, (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (35204)

**REPAIR'S!**

Repairs! are your Radio's T.V's, Deck's Giving Trouble? Bring them to us and Get them Repaired with Guarantee Dilka Watch and Radio works 284. Stanley Road Ariyakulam Junction Close to Vanavil Jaffna, Branch Kandy Road Chavakachcheri [சி-364]

**ஆண்டு - 5**

புலமைப் பரிசில் பரீட்சைக்கான கட்டுரைப் புத்தகம் விற்பனையாகிறது பெற்றுக்கொள்ளும் இடம்: அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-379)

**கைமாறப்பட்டுள்ளது**

10 2-95 அன்று ஹொலிவூட் சலூன் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எனது ஹீரோ துவிச்சக்கர வண்டியை ஒருவர் மாறி எடுத்துக்கொண்டு சென்றார். ஆனால் அவருடைய சைக்கிள் என்னிடம் உள்ளது. தொடர்பு: ஹொலிவூட் சலூன், சுன்னாகம் சந்தி (7899)

**மணமக்கள் தேவை**

வடமராட்சி இந்து, வயது 39 லக்கினம் இடபம், சித்திரை செவ்வாய் 2 ஆஸ்திரேலியாவில் என்ஜினியராக வேலை பார்க்கும் மகனுக்கும் (தற்போது இலங்கை வந்துள்ளார்) 30 வயது, லக்கினம் மகரம் – சதயம், செவ்வாய் 8, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை மகளுக்கும் தந்தையார் தகுந்த பணமக்களைத் தேடுகின்றார். ஜாதகம் குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல. 962, மே/பா உதயன். (8240)

**மணமகள் தேவை**

யாழ் இந்து, 2இல் செவ்வாய், அத்த நட்சத்திரமுடைய, 38 வயது, வெளிநாட்டு பிரஜா உரிமையுடைய மணமகனுக்கு அழகான, மெல்லிய, 34 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. தொடர்பு: V S. அன்ரனி, 252, யாழ். வீதி, மானிப்பாய் (35193)

**மணப்பெண் தேவை**

தமிழீழத்தில் உயர் பதவி வகிக்கும் சைவ, 28 வயது மணமகனுக்கு குணமான, அழகான, படித்த 26 வயதுக்குட்பட்ட 5 நம்பர் உள்ள மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. இல. 963, மே/பா உதயன். (8241)

**WANTED**

Experienced part-time Book keeper with good knowledge of Accounts and ability to prepare Balance Sheet. Remuneration and working hours negotiable. Apply No 760, C/O Uthayan Jaffna (35208)

**திருத்துதல்**

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் திருத்தியும் மறுசீரமைத்தும் கொடுக்கப்படும். மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (35187)

**யாருடையது?**

தருமநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் ஆண்களுக்குரிய துவிச்சக்கர வண்டி ஒன்று திருநெல்வேலி பாதுகாப்பு சேவையால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும் (35202)

---

**A/L 95** மீட்டல் வகுப்பு

| கணக்கியல் | தமிழ் |
|---|---|
| கலைச்செல்வன் | மணிமாறன் |

ஆரம்பம்: **16 - 02 - 1995** மாலை 6-30

★ வகுப்புகள் யாவும் மாலை 6-30 — 7-30 மணி வரையில் நடைபெறும்.

★ முழுப்பாடத் திட்டமும் பூர்த்திசெய்யப்படும்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-555)

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி எலிசபெத் ஜெயராணி விஜயதாசன்

திருமதி ஜொய்ஸ் அநிசயராணி தவராசா

அநியாய அழிப்பு: 15 - 02 - 1989

அமைதி காக்க வந்த இந்தியப்படையினர் எமது இரு கண்களாகிய அன்புச் சகோதரிகள் இருவரையும் அநியாயமாய் அழித்தார்கள். அவர்கள் பிரிவால் ஆறாத் துயருறும்:

கணவன்மார், பிள்ளைகள்,
சகோதரர், குடும்பங்கள்,
உறவினர்கள்.

யாழ். வீதி,
உடுப்பிட்டி. (35117)

---

உ
ஸ்ரீ ராம ஜெயம்

பொன்னாலை அருள்மிகு

## ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

நவகுண்ட பக்ஷ சகஸ்ர (008) கலச சங்காபிஷேக

## திவ்ய பகவத் கீதை ஹோமப் பெருவிழா

காலம்: 24-02-95 தொடக்கம் 27-02-95 வரை
நேரம்: காலை 8மணி – 11-30
மாலை 4மணி — 7-30

நிகழ்ச்சிகள்

★ கோயில் மேளக்கச்சேரி
★ விசேட மேளக்கச்சேரி
★ விசேட தெய்வீக சொற்பொழிவுகள்
★ பண்ணிசைக் கச்சேரி
★ இன்னிசைக் கச்சேரி

அத்தருணம் அடியார்கள் வருகை தந்து சிறப்பிப்பதுடன் கண்ணன் அருளைப் பெற்று உய்யுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

குறிப்பு: அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பழவகை, பூக்கள், நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் விழா குழு பொருளாளர் திரு. அ. சதாசிவம் (காரைநகர்) அவர்களிடம் வழங்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி:

இங்ஙனம்:
விழாக்குழு.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பரிபாலன சபை.
1995-02-14. (35209)

---

## திருமண வரவேற்புபசாரம்

திருநிறை செல்வன்
**இலங்கேஸ்வரன்**
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**வளர்மதி**
அவர்களுக்கும்

06 — 02 — 1995 திங்கட்கிழமை முள்ளியவளை தண்ணீரூற்றில் இனிதே நடந்தேறிய திருமணத்தை முன்னிட்டு

இன்று 15 . 02 . 1995 புதன்கிழமை

பிற்பகல் 4 00 மணி — 6 - 00 மணிவரை கொக்குவில் கிழக்கு, கருவேலடி ஒழுங்கையில் அமைந்துள்ள மணமகளில்லத்தில் நடைபெறும் வரவேற்புபசாரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வரவேற்பாளர்கள்:

திரு இரத்தினசபாபதி (சின்னத்தம்பி)
திரு. எஸ். செந்தில்குமரன்
திரு. சி. தவநாதனும் பாரியாரும்

கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (35203)

---

## கால்நடை வளர்ப்பவர்களே!
## இன்று முதல் என்றும்.....

# வெண்மை

உங்கள் கால்நடைகளுக்கு தேவையான

★ தீவனங்கள்....
★ மருந்து வகைகள்....
★ தடுப்பூசிகள்....

மற்றும் தேவையான உள்ளீடுகள்
தேவையான காலத்தில் குறித்த விலையில்
உங்களுக்கு கிடைக்கவில்லையா?

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய,
உங்களுக்கான ஆலோசனைகளைப்பெற

நாடுங்கள்:

## வெண்மை விலங்கு வேளாண் சேவை

இல 233, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

" வெண்மை நம் நாட்டின் மேன்மை "

(சி-557)

---

இலங்கை

## இளங்கலைஞர் மன்றத்தின்
# 15ஆவது இசை விழா

கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.

5ஆம் நாள் **15 - 02 - 1995**
புதன்கிழமை

## கபிலா காலணி அகம்
ஆதரவில்

மாலை

**4-00 — 5 00** மங்கல இசை
எஸ். கதிரமலை, என். பரமசிவம் — நாதஸ்வரம்
பி. பஞ்சமூர்த்தி, பி. பாலநந்தீஸ்வரன் — தவில்

**5-00 — 5-20** பாட்டு
சி. கௌரீஸ்வரி, எஸ். கௌரிமனோகரி
செ. காஞ்சனா, செ வானதி
பொ. அஜந்தா, செ. சங்கீதா
ச. சிவசக்தி, தெ. அகிலா
அ. ஜெயராமன் — வயலின்
எஸ். நாகராஜன் — மிருதங்கம்
சதா வேல்மாறன் — கடம்

**5-20 — 5-40** வாத்திய பிருந்தா
தி. ஜெனனி, ஜெ சிவசக்தி, சு. சரோஜினி, சி வித்தியாலஷ்மி, கி. நிலறாக்சி, கி. டிலறாக்சி — வீணை
சி. சொர்ணலஷ்மி, த. கலைவாணி — வயலின்
இ. இன்பன் — புல்லாங்குழல்
பி. ரதிரூபன் — மிருதங்கம்
எம். கஜன் — கடம்
கே. மயூரன் — தபேலா

**5-40 — 6-00** வயலினிசை
யசோதரா தெய்வேந்திரன், திருமகள் திருஞானசம்பந்தன், கலாராணி சிவானந்தன், சசிகலா ஜெகதீசன், சுதாயினி தேவசேருபதி, சாருமதி கணேசரட்ணசர்மா — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

**6-00 — 6-45** பாட்டு
சிவப்ரியா வைரமுத்து — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**6-45 — 7-30** பாட்டு
எஸ். நாகராஜா — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாசன் — மிருதங்கம்

**7-30 — 7-50** மங்கல விளக்கேற்றல்
திரு. பொ. சின்னத்துரை (கபிலா காலணி அகம்)
திரு. எஸ். ஞானரூபன் (ஞானம்ஸ் ஆடையகம்)
திரு. அ. முத்துலிங்கம் (முத்தொளி வீடியோ)
திரு. சி. மகாதேவா (நியூ வசந்தாஸ்)

★ அருளுரை
சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள் அவர்கள் (சுதுமலை)

★ தலைவர்
திருமதி ச. ஜெயராசா அவர்கள் (அதிபர். யாழ். இந்து மகளிர் கல்லூரி)

★ பிரதம அதிதி
திருமதி க. சிவசிதம்பரம் அவர்கள் (பிரதேச செயலர், நல்லூர்)

★ சிறப்பு விருந்தினர்
திரு. சி. கனகரத்தினம் அவர்கள் (தலைவர், திவ்ய ஜீவன சங்கம்)
திரு. பூ. ரவிதரன் அவர்கள் (உரிமையாளர்: ராஜி சில்க்)

**7-50 — 8 50**
எம் எஸ். சண்முகநாதன், வீ. கே. பஞ்சமூர்த்தி — நாதஸ்வரம்
கே. நித்தியானந்தன், ரி. உதயசங்கர், கே. சிவகுமார், என். ஆர். எஸ். ரவீந்திரன், ஆர்முருகானந்தன் — தவில்

**8-50 — 10-00**
திருமறைக் கலா மன்றம் வழங்கும்
"ஒரு தேடல்..."

வாழ்த்துவோர்:
**அன்பு அழகுச் சோலை (சோமன்ஸ்)**
48, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம். [சி-541]

---

## முக்கிய கலந்துரையாடல்

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம்

✱ பொது நிர்வாகசபை உறுப்பினருக்கு

மிக முக்கிய விடயமாக கலந்துரையாடுவதற்காக சகல கோட்டங்களினதும் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இடம்: புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்
காலம்: **15-2-1995** புதன் பி. ப. 4மணி

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்

(சி-560)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலவகையான
## மோட்டார் ஊர்தி ஓட்டுநர்களுக்கும்
# சாரதி அனுமதி பெறுவதற்கான நடைமுறைகள்

தமிழீழத்தில் உள்ள சகல மோட்டார் ஊர்தி ஓட்டுநர்களும் 1995-2-15 ஆம் நாள் தொடக்கம் 1995 - 08 - 15 ஆம் நாட்களுக்குள் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். இச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறைகள் பற்றிய விதிகள் பின்வருமாறு:

எந்த ஒரு மோட்டார் ஊர்தியையும் செலுத்துவதற்குரிய அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு உள்ளடங்கியவராக இருத்தல் வேண்டும்.

01. ஆண்/பெண் - 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
02. மோட்டார், பஸ் வண்டிகள் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திர விண்ணப்பதாரி உயரம் 5 அடி 3 அங்குலத்திற்கு குறையாமலும், ஏனைய விண்ணப்பதாரிகள் 5 அடி உயரத்திற்கு குறையாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. மோட்டார், பஸ் வண்டிகள் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகள் 21 வயதைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும். இதற்குரிய சான்றிதழை அங்கீகரிக்கப்பட்ட வைத்தியரிடம் இருந்து பெற்றிருத்தல் அவசியம். விண்ணப்பத்துடன் வைத்தியச் சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.
05. விண்ணப்பதாரிகள் மோட்டார் பரிசோதகரின் வீதி ஒழுங்குப் பரீட்சையில் சித்திபெற வேண்டும். இப்பரீட்சை நேர்முகப் பரீட்சையாகவே நடைபெறும்.
06. ஊர்திச் சாரதிக்கான அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி வீதி ஒழுங்கு விதிகள், முதலுதவி சம்பந்தமான ஆறு பயிற்சி வகுப்புக்களுக்கு சமுகமளிக்க வேண்டும். இப்பயிற்சி வகுப்புக்கள் முடிந்த பின்னர் பரீட்சார்த்திகள் எழுத்துப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். பின்னர் ஊர்தி ஓட்டும் பரீட்சை நடைபெற்று இரு பரீட்சைகளிலும் சித்தியெய்திய பின்னர் அனுமதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.
07. விண்ணப்பதாரிகள் தாம் எந்த வகை ஊர்தி செலுத்துவதற்கு விண்ணப்பித்திருந்தாரோ, அதே வகை ஊர்தியை விண்ணப்பதாரர் செய்முறைப் பரீட்சையன்று கொண்டு வருதல் வேண்டும்.
08. பரீட்சைக்கு கொண்டு வரப்படும் ஊர்தி நடப்பு வருடத்திற்குரிய அனுமதிப் பத்திரத்தை பெற்ற ஊர்தியாகவும் இருத்தல் வேண்டும்.
09. மேலே குறிப்பிட்ட அனுமதிப் பத்திரம் இல்லாத எந்த ஓர் ஊர்தி பரீட்சார்த்தியின் வீதிப் பரீட்சைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
10. பரீட்சார்த்தி ஒருவர் ஊர்தி ஓட்டும் செய்முறைப் பரீட்சையிலும், வீதி ஒழுங்கு விதி, முதலுதவி பற்றிய அறிவு சம்பந்தமான நேர்முகப் பரீட்சையிலும் சித்தியெய்த தவறும் இடத்தும், அல்லது மேற்குறித்த மூன்று பரீட்சைகளில் ஒன்றில் சித்தியெய்த தவறும் இடத்து அவர் அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவர். மேற்குறித்த இரு பரீட்சைகளில் ஒன்றில் சித்தியடையத் தவறும் பரீட்சார்த்தி சித்தியெய்த தவறிய பரீட்சைக்கு திரும்பவும் அமர்ந்து சித்தியெய்தும் போது அவர் முழுப் பரீட்சையிலும் சித்தியெய்தியவராகக் கருதப்பட்டு அனுமதிப் பத்திரம் பெறும் தகுதியைப் பெறுவார். இரு பரீட்சைகளிலும் ஒரே நேரத்தில் சித்தியெய்த வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கமாட்டாது.
11. முக்கிய குறிப்பு:-

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் 20 - 02 - 1995 இல் இருந்து எமது செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மோட்டார் ஊர்தி / உந்துருளி செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் பெறவுள்ள விண்ணப்பதாரிகளுக்கான
## அறிவுறுத்தல்கள்

01. படிவங்களை தமிழில் பூர்த்திசெய்து தமிழிலேயே கையெழுத்திடல் வேண்டும்.
02. விவரங்களை குறித்த கூடுகளினுள்ளாக தெளிவாக எழுதுதல் வேண்டும். பொருத்தமான இடங்களில் அடையாளம் இடுக.
03. விவரங்கள் இல்லாத பொருத்தமற்ற கூடுகளை வெறுமையாக விடுக.
04. சாயற்பட பிரதிகள் இரண்டும் ஒப்படைக்கப்படல் வேண்டும். (6.25ச.மீX5 ச.மீ)
05. மோட்டார் ஊர்திகளுக்குரிய பின்வரும் குறியீட்டு எண்களையே பொருத்தமான கூடுகளிலும் எழுதுதல் வேண்டும்.

| ஊர்திகள் | குறியீட்டு எண் |
|---|---|
| லொறிகள், பஸ்கள் 34 அந்தர் எடைவரை | 01 |
| நோயாளர் வண்டிகள் கனங்குறைந்தவை | 02 |
| பிரேத ஊர்திகள் | 03 |
| கார்கள் 24 அந்தர்வரை கனம் குறைந்த வாடகைக்காரர்கள் | 04 |
| விவசாய உபயோக ஊர்திகள் | 05 |
| முச்சக்கர ஊர்திகள் | 06 |
| மோட்டார் துவிச்சக்கர வண்டிகள் | 07 |
| மேலே குறிப்பிடாத மோட்டார் ஊர்திகள் | 08 |

06. பகுதி ஈ "02"இல் குறிப்பிடப்பட்ட ஊர்திகள் பயன்படுத்தும் நோக்கத்தை பிரத்தியேகம் எனின் 'பி' எனவும், அரச அலுவலகப் பாவனை எனின் 'அ' எனவும், வியாபார நோக்கம் எனின் 'வி' எனவும் பொருத்தமான கூடுகளில் இடுக.
07. அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான கட்டண விவரம் வருமாறு.

| ஊர்திகளின் வகை | கட்டணத் தொகை |
|---|---|
| 1. மோட்டார் சைக்கிள் | 300/- |
| 2. பிரத்தியேக மோட்டார் கார் 24 அந்தருக்கு உட்பட்டவை | 300/- |
| 3. 24 அந்தருக்கு மேற்பட்ட மோட்டார் | 400/- |
| 4. லொறி உட்பட பஸ் மோட்டார் ஊர்திகள் | 1,000/- |
| 5. பிரேத வண்டி | 1,000/- |
| 6. உழவு இயந்திரம் மட்டும் | 500/- |
| 7. உழவு இயந்திரம் இழுவைப் பெட்டியுடன் | 700/- |

08. பூரணப்படுத்தப்பட்ட படிவத்தை ஒப்படைக்கும்போது அனுமதிப்பத்திரத்தைப் பெறும்போது விண்ணப்பதாரி குடும்பப்பதிவு அட்டையுடன் தன்னை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களையும்கொண்டு நேரடியாக தமிழீழ நிர்வாக சேவைக்கு சமுகம் தருதல் வேண்டும்
09. தமிழீழ நிர்வாக சேவையில் அனுமதி வழங்கும் அலுவலக பகுதி திங்கள் தொடக்கம் வெள்ளி ஆகிய நாட்களில் காலை 8 - 30 மணி தொடக்கம் 5 - 00 மணி வரை செயற்படும்.
10. விண்ணப்ப திகதியன்று 18 வயதினைப் பூர்த்தி செய்தவர்கள் எவரும் ஊர்தி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்க முடியும். இருப்பினும் மருத்துவச் சான்றிதழ் இவ் வயதினையும் அனுமதி வழங்குதலையும் கட்டுப்படுத்தும்.
11. விண்ணப்பப் படிவத்துடன் தமிழீழ நிர்வாக சேவையினால் வழங்கப்படும் மருத்துவத் தகுதிச் சான்றிதழை தகுதிவாய்ந்த மருத்துவர் மூலம் பூரணப்படுத்தி விண்ணப்பப் படிவத்துடன் ஒப்படைக்க வேண்டும்.
12. வர்த்தக நோக்கம் கருதி ஊர்தி அனுமதிப் பத்திரங்களை கோரும் விண்ணப்பதாரிகள் செய் முறைப்பரீட்சையுடன் ஓர் எழுத்து மூலமான பரீட்சையையும் எதிர்நோக்க வேண்டும்
13. அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பான பரீட்சைகளுக்காக விண்ணப்பதாரி தமிழீழ நிர்வாக சேவையினால் அழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த நேரத்திற்கு சமுகம் தர வேண்டும். சமுகம் தர முடியாத நிலையில் விண்ணப்பதாரி காணப்படுவாராயின் உடனடியாக தமிழீழ நிர்வாக சேவைக்கு அறிவித்தலை வழங்கி தனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுவதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளல் வேண்டும்.
14. படிவங்களை திருத்தமான முறையில் பூர்த்தி செய்யாது விடுதல், வேண்டப்படும் ஆவணங்களை ஒப்படைக்காது இருத்தல், திருப்தியற்ற மருத்துவச் சான்றிதழ், பரீட்சையில் திருப்தியற்ற பெறுபேறுகளைப் பெற்றிருத்தல் போன்ற காரணங்களுக்கான அனுமதி வழங்குவதை தமிழீழ நிர்வாக சேவை மீள் பரிசீலனை செய்யலாம் அல்லது தடுக்க முடியும்.
15. சாரதி அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் தமிழீழ நிர்வாக சேவையால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும் தங்களால் தட்டச்சு செய்யப்பட்டு வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## மோட்டார் ஊர்தி/உந்துருளி செலுத்துவதற்கான
## அனுமதிப் பத்திரம் பெறும் விண்ணப்பப் படிவம்

(அ) விண்ணப்பதாரி தொடர்பானவை.
01. முதலெழுத்துக்களுடன் இறுதியாக வரும் பெயர்.
02. முதலெழுத்துகளினால் குறிக்கப்படுகின்ற பெயர்.
03. வேறு பெயர் (இருப்பின்)
04. குடும்ப பதிவு அட்டை இல.
05. அடையாள அட்டை இல.
06. பால் ஆண் பெண்
07. பிறந்த திகதி திகதி மாதம் ஆண்டு
08. விண்ணப்பிக்கும் திகதியில் வயது
09. உயரம் மீற்றரில்.
10. நிரந்தர முகவரி
இல. வீதி ஊர்
கி.சே.பி. பி.செ.பி.
கோட்டம் மாவட்டம்
11. தற்போதைய வதிவிட முகவரி
இல. வீதி ஊர்
கி.சே.பி. பி.செ.பி
கோட்டம் மாவட்டம்
12. தற்போதைய தொழில்
நிரந்தரம் தற்காலிகம்
13. தொழில் புரியும் அலுவலகம் / நிறுவனம்
14. அலுவலக முகவரி
இல. வீதி ஊர்
15. வதிவிடத்தில் இருந்து மிகக் கிட்டிய காவற்றுறைப் பணிமனையின் முகவரி
இல. வீதி ஊர்

(ஆ) ஏற்கனவே அனுமதி கோரப்பட்டு மறுக்கப்பட்டவர்களுக்கு மட்டும்.
01. அனுமதி கோரி விண்ணப்பித்த திகதி:
திகதி மாதம் ஆண்டு
02. விண்ணப்பப்படிவ இல.
03. விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட அலுவலகம்
04. அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணம்

(இ) ஏற்கனவே குறித்த ஊர்தி செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருந்து அதனை புதுப்பிக்கும் நோக்கமுடையவர்களுக்கு மட்டும்
1. அனுமதிப் பத்திர இலக்கம்
2. அனுமதி வழங்கப்பட்ட ஊர்தியின் வகுப்பு (குறியீட்டு எண்)
3. அனுமதி வழங்கிய அலுவலகம்
4. அனுமதி வழங்கப்பட்ட காலம்
திகதி மாதம் ஆண்டு
5. அனுமதி முடிவுறும் காலம்
திகதி மாதம் ஆண்டு

(ஈ) புதிதாக அனுமதி கோரும் ஊர்தி தொடர்பான விவரம்.
01. வாகனத்தின் வகை/வகுப்பு குறியீட்டு எண்
02. அனுமதிப் பத்திரம் பெறும் நோக்கம்.
பிரத்தியேக (சொந்தபாவனை) அரச அலுவலக பாவனை
வியாபார நோக்கம்

(உ) விண்ணப்பதாரியின் உறுதி மொழி

........................................ ஆகிய நான்
1. ............ ........ திகதியில் எடுக்கப்பட்ட சாயற் படப் பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன்.
2. மோட்டார் ஊர்தி செலுத்துனர்களுக்கான தமிழீழ நிர்வாக சேவையின் பிரமாணங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றேன்.
3. மேலே எனது விண்ணப்பத்திற்குரிய ஊர்தியை செலுத்துவதற்குரிய அனுமதிப் பத்திரக் கட்டணமாக ரூபா ......... ...... வினை செலுத்தியமைக்கான இல. ........ .... பற்றுச் சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன்.

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். | சாயற்படத்தின் இரு பிரதிகள் அளவு 6. 25 ச. மீ X 5 ச. மீ தலை முதல் மார்பு வரை மாத்திரம் முகம் முழுவதும் நேராகத் தெரிதல் வேண்டும் ஆறு மாத காலத்திற்குள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு பிரதியை இங்கே ஒட்ட வும். |
|---|---|

6 ச.மீ

மேலே தரப்பட்ட விவரங்கள் அனைத்தும் நான் அறிந்தவரை உண்மையானவை எனவும் திருத்தமானவை எனவும் உறுதிப்படுத்துவதோடு, என்னால் தரப்பட்ட விவரங்கள் தவறுடையவை என தமிழீழ நிர்வாக சேவை இனங்காணுமாயின் என் மீது பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதற்கு எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

........................ திகதி ........................ விண்ணப்பதாரியின் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்

ஊ. அலுவலகப் பாவனைக்கு மட்டும்.
01. விண்ணப்பதாரியின் குருதி: வகை
02. மருத்துவ சான்றிதழ்:
திருப்தியாகவுள்ளது திருப்தியாகவில்லை
03. மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டவர்:
பெயர் நிலை
04. வழங்கப்பட்ட அனுமதிப் பத்திர இல.
05. அனுமதி வழங்கும் வகை: முதல் அனுமதி
புதுப்பித்தல் மூலம் அனுமதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாதனை படைத்த மாணவருக்கு பரிசில்

யாழ்ப்பாணம், பெப். 15
சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தில் கடந்த ஆண்டில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கிப் பாராட்டும் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த, துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்

யாழ்ப்பாணம்கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

கடந்த ஆண்டில் சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளிலிருந்து கோட்ட, வலய, மாவட்ட, தேசிய மட்டங்களில் கரப்பந்தாட்ட, உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் கலை, பண்ணிசை, சித்திரைப் போட்டிகளிலும்தமிழீழமுதன் நிலை,இளநிலை பொதுத் தேர்வுகளிலும் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை ஆகியவற்றினும் சாதனை படைத்த மாணவர்களுக்கு இவ்விழாவில் பரிசில்கள் வழங்கப்படும். (இ)

## விவசாய சங்கங்கள் நிறுவப்படும்

வலி-தெற்கு, பெப். 15
நாடு முழுவதிலும் 15 ஆயிரம் விவசாயச் சங்கங்கள் நிறுவப்படவுள்ளன. இம் மாத முடிவில் இவற்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காணிவள அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

விவசாய உற்பத்திப் பொருள்களின் பெருக்கம், விலைத் தளம்பல், சந்தைப் படுத்தல் போன்ற விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு வகையான கஷ்டங்கள் குறித்து நிவாரண நடவடிக்கைகளை இவை மேற்கொள்ளும். (இ-152-14)

## பல்கலைக்கழக உறுப்பினராக ஸ்ரீபாஸ்கரன்

யாழ்ப்பாணம், பெப். 15
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன் யாழ்ப்பாண பல்கலைக்கழகக் குழு உறுப்பினர்களில் ஒருவராக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப் பட்டுள்ளார்.

அவரது நியமனம் கடந்த ஜனவரி முதல் திகதியில் இருந்து அமுலுக்கு வந்துள்ளது. அடுத்த மூன்று ஆண்டு காலத்துக்கு அவர் பல்கலைக்கழக உறுப்பினராக இருப்பார்.

இம்முறை பல்கலைக்கழக குழு உறுப்பினர்களாகத் தரிவு செய்யப்பட்டுள்ள நாட்டுப் பேரில் திரு. ஸ்ரீபாஸ்கரனே புதியவர் ஆவார் ஏனையோர் முன்னர் அப் பதவியில் இருந்தவர்கள்.

திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனும், ஆசிரியரும் ஆவார். (இ)

## இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

சண்டிலிப்பாய், பெப் 15
வலி-தென் மேற்கு பிரதேச சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகலை சனசமூக நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் வாரத்தில் நான்கு நாட்கள் இயங்கி வருகின்றது [இ-135-14]

O/L
விஞ்ஞானம்
Mr. J R. சூரி
பிரிவு II
ஆரம்பமாகியுள்ளது
சனி ஞாயிறு 6 30 a m
வெள்ளி 5 30 p m
SHAMROCK
யாழ். சுண்டிக்குளி
(35213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இணுவில்

திருவருள் மிகு சிவகாமி அம்மன் கோவில்

குமாரி, சுவாசினி சுமங்கலி சகித

★ மஹா தீபபூஜை ★

காலம்: **15 - 02 - 1995** புதன்கிழமை

நேரம்: மாலை 5 மணி

பிற்பகல் 4மணி முதல் ஏழாலை வசந்தபுரம் வசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தான பஜனைக் குழுவினரின் பஜனை இடம்பெறும்.

கன்னிப் பெண்கள் சுமங்கலிகள் தீபபூஜையில் பங்கு கொண்டு அம்பிகையின் அருள் பெற்றுய்வார்களாக!

அம்பிகையின் அருள் வேண்டி,

**திரு. மூ. புஷ்பராசா குடும்பத்தினர்**

"அன்னை இல்லம்" இணுவில்.

(7900)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் நன்னியர் கந்தையா

[பனம் தொழில் வல்லுநர்]

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இல 129 நாக்கனாவத்தை அங்கத்தவர் நன்னியர் கந்தையா அவர்கள் தொழில் செய்யும் போது அகால மரணமானார் என்பதை கவலையுடன் அறியத்தருவதுடன் அவரை இழந்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது சங்கத்தின் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

பணிப்பாளர், அங்கத்தவர்கள்,
ஊழியர்கள்.

சுன்னாகம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

[சி/15781]

## 61ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்உலகில்; | விண்உலகில்: |
|---|---|
| 21 — 07 — 1952 | 17 — 12 — 1994 |

### அமரர் வே. தாமோதரம்பிள்ளை

(கைதடி)

என்றும் எம் இதயத்தில் வீற்றிருக்கும் எம் அன்புத் தெய்வமே! எப்போ காண்போம் உம் அழகு முகம். எப்போ கேட்போம் உம் அன்பு மொழி. ஏனய்யா எமைப் பிரிந்து சென்றாய்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்.

''திவ்ய பவனம்''
கைதடி கிழக்கு,
கைதடி.

(35206)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 08 — 09 — 1934 | 15 — 02 — 1992 |

அமரர்

### நாகலிங்கம் செல்வானந்தம்

[கட்டடப் பகுதி ஒப்பந்தகாரர்]

திதி: 15 — 02 — 1995

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்து எங்களுக்கோர் நல்வழி காட்டி வாழ வைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டமனாறு.

[35210]

# மோதல் தவிர்ப்பு நீடிக்காவிடினும் புனரமைப்பு பணி தொடருமாம்

கொழும்பு, பெப். 15

மோதல் தவிர்ப்பு நிலை நீடித்காலும் நீடிக்காவிட்டாலும் சரி வடமாகாணத்தில் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது என்று ஜனாதிபதி செயலணி முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலணி இம்முடிவை எடுத்ததாக ''சண்டே லீடர்'' தகவல் வெளியிட்டுள்ளது.

மார்ச் மாதம் ஆரம்பித்து

( 6ஆம் பக்கம் பார்க்க)

உ

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் துணை

ஏழாலை தெற்கு, வசந்தபுரம்

சின்னம்மன் என்று அழைக்கப்படும் அவதாரநாயகி

(நடமாடும் தெய்வம்)

34 ஆவது

# ஜயந்திப் பெருவிழா

## 16 - 02 - 1995 வியாழக்கிழமை

திருவருளும் குருவருளும் பெருகி விளங்குகின்ற வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன், அருள் பெருகி மனித வடிவில் நடமாடி என் கண் பார்வையிலேயே என் குழந்தைகள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். இதையே ஒவ்வொரு தாயும் விரும்புவாள். ஒவ்வொரு குழந்தையும் அவளின் கண்ணின் மணிகள் தாம் ஒன்றென்ன ஒன்பதென்ன ஒவ்வொரு குழந்தையும் அதன் தேவையாவும் அவளது ஜீவநாடி. தெய்வமே தாயானாள். அவள் அகன்ற விழி கொண்டவளாய் அவதரித்தாள்.சர்வேஸ்வரன் விஸ்வேஸ்வரனாகி அகிலத்தையாளும் பொறுப் பேற்ற பொழுது விசாலாட்சியாக அன்னை வடிவெடுத்தாள் ஏன்?

ஒன்றா இரண்டா குழந்தைகள்? அகிலமெல்லாம் இருக்கும் குழந்தைகளை தன்பார்வையில் வைத்து காத்திட வேண்டாமா?

ஏழாலைக் கிராமத்தில், களபாவோடையில், வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள் அன்னை நாகபூஷணி. அவ்வன்னையால் 7 வயது சிறுமியாக ஆட்கொள்ளப்பட்டு அன்று தொடக்கம் இன்று வரை தன்னை நாடுவோருக்கெல்லாம், உறுபிணி தீர்க்க ஓடி வரும் அடியார்கட்கும் தினம் தினம் வரம் அருளும் அருள் அன்னையாம் வசந்தகுமாரி தியாக ஒளிபரப்பி வாழ்கின்றாள். அவ்வன்னை தனது 34 வயது பிறந்த தினத்தை (16-02-95) வியாழக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியார்களின் வேண்டுகோளின்படி கொண்டாடவிருக்கின்றாள்.

அன்று செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்கள் வேதமோத, அறிஞர்கள் அருள் ஆசிகூற, மங்கள துந்துபி முழங்க, பஜனைகளில் பக்தர்கள் புகழ்பாட அடியார்கள் மனம் கசிந்து உருகி வாழ்த்த அன்னை ஜயந்தி தினத்தை காண்கின்றாள்.

### அன்னையின் பார்வையில் அன்றைய நிகழ்ச்சிகள்

*காலை 7-00 மணிக்கு* அபிடேகம்
*காலை 8-00 மணிக்கு* பூசை
*காலை 9-00 மணிக்கு* வேதம் ஓதுதல் இணுவில் தர்மசாஸ்தா குருகுலமாணவரும் அதிபர், தா. மகாதேவக் குருக்களும்
*காலை 10 00 மணிக்கு* ஆசியுரை
*காலை 10-15 மணிக்கு* பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படல்

*கௌரவிக்கப்படுபவர்கள்:*

சிவஸ்ரீ. தி. கெங்காதரக் குருக்கள் அவர்கள்
சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள் அவர்கள்
திரு. த. சிவகுமாரன் (கம்பன் கழக அமைப்பாளர், காரைநகர்)
சிவத்திரு. குமாரசுவாமி அவர்கள்
திரு. க. நாகேஸ்வரன் M.A.

*கௌரவிப்பவர்:*

திரு. மா. நித்தியானந்தம் அவர்கள்
(ஆலய அறங்காவலர்)

*11-00 மணிக்கு* சொற்பொழிவு
திரு. த. சிவகுமாரன்
(கம்பன் கழகம், காரைநகர்)
சிவத்திரு. குமாரசுவாமி அவர்கள்
திரு. க. நாகேஸ்வரன் M. A.

*12-00 மணிக்கு* சுவாமி உலா வருதல்
*1-00 மணிக்கு* அன்னதானம்

தேவஸ்தானத்தினால் வழங்கப்படும் அன்பளிப்புக்களையும் முச்சக்கர வண்டிகளையும் ஆலயப் பராமரிப்பில் உள்ள சிறுவர்களுக்கும், வயோதிபர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும்

திரு. ஆ. மகாலிங்கம்
[பிரதேச செயலாளர், உடுவில்]
அவர்களால் வழங்கப்படும்.

(சி-561] தேவஸ்தானம்

## அனுமதிப் பத்திரம் பெறும்---

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

06. அனுமதி வழங்கப்படும் ஊர்தியின் வகுப்பு/வகுப்புகள்.

குறியீட்டு எண்கள் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

07. அனுமதி பெறும் நோக்கம்: 'பி' [ ] 'வி' [ ] 'அ' [ ]

08. வழங்கப்பட்ட காலம்:

திகதி [ ] மாதம் [ ] ஆண்டு [ ]

(எ) விண்ணப்பதாரர் ..................... என்பவர் .............. என்னும் அடையாளம் காட்டும் இலக்கத்தைக் கொண்ட .............. இல் என்னால் பரீட்சிக்கப்பட்டு .................. ஐச் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பதற்கு ..................... நான் உறுதிப்படுத்துகின்றேன். விண்ணப்பதாரரினால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை.

..............................
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

..............................
மோட்டார் ஊர்திப் பரீட்சகர்
ஒப்பம்.

.............................................. என்பவருடைய இல. .............................. கொண்ட மோட்டார் வாகனம்/உந்துருளி செலுத்துவதற்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை சரிபார்த்துப் பெற்றுக் கொண்டேன்.

..............................
திகதி

..............................
தமிழீழ நிர்வாக சேவை அலுவலகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைவிழாவில் நாளை

யாழ்ப்பாணம், பெப். 15

இளங்கலைஞர் மன்றத்தின் 15ஆவது இசைவிழாவின் 6ஆம் நாளான நாளைய நிகழ்வுகள் மாலை 4 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 5 மணிக்கு இளங்கலைஞர்களின் மிருதங்க இசை, பாட்டு என்பன நடைபெறும்.

5-40க்கு குகரஞ்சினி துரை ராஜசிங்கத்தின் வயலினிசை, 6-10க்கு சர்மிளா புவனேசனின் புல்லாங்குழலிசை, 6-50க்கு சௌந்தராம்பிகை தர்மலிங்கத்தின் பாட்டு என்பன நடைபெறும். இரவு 8 மணிக்கு வீ. கே. பஞ்சமூர்த்தியின் புல்லாங்குழலிசையும் 9 மணிக்கு சுதேசிய கலாமன்றமும், உதயதாரகை கலாச்சாரக் குழுவும் இணைந்து வழங்கும் 'சூரியனைச் சுட்டெரிப்போம்' என்னும் நாடகமும் நடைபெறும்.

யாழ். ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளர் திரு. எஸ். சோதிலிங்கம் தலைமையில், மற்றா பேணிச்சர் ஆதரவில் நடைபெறும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரைப்பிஸ்ட் தேவை

தமிழ், ஆங்கில ரைப்பிங் தெரிந்த பெண் ரைப்பிஸ்ட் தேவை. ஆங்கில அறிவுடையவர்க்கும், அண்மையில் வசிப்பவர்க்கும் முன்னுரிமை வழங்கப்படும். சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கும் இறுதி நாள் **21 - 2 - 95**

தொடர்பு:-
**அதிபர்,**
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

(35218)

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் தாளையடி ஐயனார் ஆலயம் மற்றும் ஆலய சொத்துக்களும் பெரியதம்பி வாமதேவன் ஆகிய எனக்கே உரித்தானதாகும் என்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

மேலும் இவ்வாலயத்தின் திருப்பணிக்கு பணம், பொருள், வழங்க விரும்புபவர்கள் ஆலய திருப்பணிச் சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:- தலைவர் / செயலாளர்.
தாளையடி
சிறி கரிகர புத்திர ஐயனார் ஆலய
திருபணிச்சபை சுன்னாகம்.
வங்கி கணக்கு இல:- 14710
இலங்கை வங்கி சுன்னாகம்.

இங்ஙனம்
பெரியதம்பி வாமதேவன்
மற்றும் சகோதரர்களும்,
உரிமையாளரும்,
ஆதீனகர்த்தாவும், பூசகரும்.

ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.

(சி/5780)

## கேக் ஐசிங் கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது

திருமதி R. செல்வராணி தேவராஜாவினாலும், அவரது மாணவிகளாலும் நடத்தப்படும் மேற்படி கண்காட்சி இன்றும், நாளையும் (15, 16 ஆம் திகதிகளுக்கு) நீடிக்கப்பட்டுள்ளது.

*கண்காட்சி நேரம்:*

மு. ப. 8 மணி முதல் பி. ப. 7 மணிவரை

- ✶ கலியாண கேக் வடிவமைப்புகள்,
- ✶ பிறந்தநாள் கேக் வகைகள்,
- ✶ மாச்சினி மலர் வகைகள்,
- ✶ தையல் பூ வேலைப்பாடுகள்.

இடம்:

**ஜெயா கேக் ஐசிங் சென்ரர்**

இல. 7, ஜெயமஹால், கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி.

(சி/564)

## கணக்கியல் கணக்காய்வு பயிற்சி நெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின நிதித்துறையினரால் நடாத்தப்பட்டுவரும் கணக்கியல் கணக்காய்வு பயிற்சிக் கல்லூரியின் [1995] இவ்வாண்டுக்கான பயிற்சியாளர்களை தெரிவு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் வரையறைகளுக்கு இணங்க க. பொ. த. [உயர்தர] தேர்வில் வர்த்தகப் பிரிவில் தேறியவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. இதில் சேரவிரும்புவோர் தங்களால் தயாரிக்கப்பட்ட வேண்டுகைகளுடன் கல்விச்சன்றிதழ்களுடனும் நேரடியாக 17-2-95 அன்று காலை 10 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு வருகை தரவும்.

**வரையறைகள்:-**

1. பயிற்சிநெறி நிறைவடைந்ததும் நிதித்துறையால் செயற்படுத்தப்படும் தொழில் முயற்சிகளில் தகுந்த ஊதியத்தில் பொருத்தமான பணியில் அமர்த்தப்படுவார்.
2. ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளாவது பணியாற்ற வேண்டும்
3. பயிற்சிக்காலத்தில் அல்லது 5 ஆண்டு பணிக்காலம் நிறைவடைவதன்முன் விலக விரும்புவோர் பயிற்சி செலவை மீளளிக்க வேண்டும்.

★ பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும்.

நேர்முகத் தேர்வு நாள்:- 17 – 2 – 95

வருகை தரவேண்டிய முகவரி:-

**வருவாய்ப் பகுதிச் செயலகம்,**
நிதித்துறை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[/சி565]

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## வளம் மாறிச் செயற்படலாமா?

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் உத்தேச புனரமைப்புப் பணிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த மாதத்தில் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் புனரமைப்புக்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட செயலணிக் குழு திங்களன்று கூடி இது சம்பந்தமான முடிவை எடுத்திருக்கிறது.

போர் காரணமாக வடக்கு-கிழக்கில் நிகழ்ந்த அழிவுகளும், உண்டான பாதிப்புகளும் எழுத்தில் அடங்காதவை. இந்த அழிவுகளிலும், பாதிப்புகளிலும் இருந்து தமிழ் மக்கள் மீண்டு எழுவதற்கு புனர்நிர்மாணம், புனர்வாழ்வு ஆகியன அவசியம். ஈழத் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையை முந்திய மட்டத்துக்கு உயர்த்துவதற்குப் புனரமைப்பு, புனர்நிர்மாணம், புனர்வாழ்வு என்பன தவிர்க்க முடியாதவை.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது திணித்த போர் அவர்களின் வாழ்க்கை நிலையையும், தமிழீழத்தின் அபிவிருத்தியையும் பல வருடங்களுக்குப் பின்தள்ளி விட்டது. சாம்பரில் இருந்து எழும் பீனிக்ஸ் பறவை போல, அழிவிலிருந்து புத்துயிர் பெற்று அபிவிருத்தி காண வேண்டிய கட்டாய தேவை உண்டாகி இருக்கிறது.

ஆகையால், புனரமைப்பு புனர்வாழ்வுப் பணிகளை அரசு இங்கு தொடங்குமானால் அதனை மக்கள் வேண்டாம் என்று கூறப் போவதில்லை. இப்பணிகளுக்கு நிறையப் பணம் தேவை. அந்தளவுக்கு தமிழ் மக்களிடம் நிதிவளம் இல்லை. ஆகையால் புனரமைப்புக்கான நிதிவளம் வெளியில் இருந்தே வர வேண்டும்.

வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாணத்தினை பூரணமாகச் செய்யக்கூடிய அளவுக்கு சந்திரிகா அரசின் நிதி நிலைமையும் சீராக இல்லை. அதனால் வெளிநாட்டு உதவி பெற்றே வடக்கு-கிழக்கு புனரமைப்புப் பணிகளைச் செய்வதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. போரை நிறுத்தினால் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதி உதவி செய்யத் தயாராக இருப்பதாகப் பல வெளிநாடுகள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளன.

எனவே, வடக்கு-கிழக்கில் புனர்நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பது என்ற அரசின் அறிவிப்பு, அதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுத் தரும் என்பதாலேயே இது விடயத்தில் அது அதிக அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்கிறது. அதில் வியப்பொன்றும் இல்லை.

போரை நிறுத்திக் கொண்டு புர்ணநிர்மாணப் பணிகளைச் செய்வதா அல்லது புனரமைப்பு வேலைகளைச் செய்து கொண்டு — அவற்றைத் தொடங்கிய பின்னர் — போரை நிறுத்துவதா என்ற புதிய தர்க்க நிலையை செயலணிக் குழுவின் அறிவிப்பு உருவாக்கியுள்ளது!

போரை நிறுத்திவிட்டு, அதற்குப் பின்னர் புனரமைப்புப் பணிகளை செய்வதுதான் பொருத்தமானது. புனரமைப்புப் பணிகளைச் செய்து கொண்டு போரைத் தொடர்வது அர்த்தமற்றது. புனர்நிர்மாண வேலைகளைச் செய்து விட்டு, குண்டுவீச்சு நடத்தினால் என்னாகும்?

அதே போல யாழ்ப்பாணத்துக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்காமல் புனர்நிர்மாணப் பணிகளைச் செய்வது என்பது நடைமுறைச் சாத்தியமாகாது. வாயால் சொற்பந்தல் போடுவதால் காரியம் ஆகிவிடுமா?

புனரமைப்புப் பணிகளைச் செய்வதற்காகவேனும் போரை நிறுத்தி, போக்குவரத்துப் பாதையையும் திறக்க வேண்டும். அந்த வழியில் அரசு சிந்திக்கத் தயங்குவது ஏன்? வளம் மாறிச் செயற்பட முனைவது புத்திசாலித்தனமல்ல.

போரை நிறுத்துவதில் அரசுக்குள்ள கஷ்டங்கள் என்ன? அதற்கான ஆணையை மக்களிடமிருந்து பெற்ற பின்னரும் தயக்கத்தின் காரணத்தை அரசு வெளியிட வேண்டும்.

# அரசியல்தீர்வுகுறித்தயோசனைகள் அடுத்தகட்டப்பேச்சில் முன்வைப்பு

கொழும்பு, பெப். 15

விடுதலைப் புலிகளுக்கும் அரசதரப்பினருக்கும் இடையில் நடைபெறும் அடுத்தகட்ட சமாதானப் பேச்சின் போது இனப்பிரச்சினை தொடர்பான அரசியல் தீர்வு யோசனைகள் அரச தரப்பினால் முன்வைக்கப்படும்.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. குசும் சிறி பாலபட்டபெண்டி 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு மேற்கண்டவாறு

### பாலபட்டபெண்டி அறிவிப்பு

தெரிவித்துள்ளார்.

தற்போதைய மோதல் தவிர்ப்பு நிலையை போர் நிறுத்தமாக விஸ்தரிப்பது மற்றும் தரைப்பாதை ஒன்றை திறப்பது ஆகியன குறித்தும் அடுத்தகட்டப் பேச்சில் ஆராயப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனையை தயாரிப்பதில் ஜனாதிபதியும் அவரது உதவியாளர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே சமாதானப் பேச்சுக்களை நடத்த அரசக்குழு 'மிக விரைவில்' யாழ்ப்பாணம் செல்லவிருக்கிறது. எவ்வளவு விரைவில் என்பதை என்னால் இப்போது சொல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்த அமுல் தொடர்பாக அரச தரப்பிடம் விடுதலைப் புலிகள் விளக்கம் கோரி இருப்பதும்—

அரசிடமிருந்து விளக்கம் கிடைத்த பின்னரே கண்காணிப்புக் குழுக்கள் இயங்க இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கண்காணிப்புக் குழுக்கள் இயங்க ஆரம்பித்த பின்னரே நான்காவது கட்டப் பேச்சு நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபின்னர் அரசு விதித்த இரு நிபந்தனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பினர் அரச தரப்பிடம் விளக்கம் கோரியுள்ளனர்.

மீன்பிடிப்பதற்கு இருந்து வரும் கட்டுப்பாடும் அதில் ஒன்றாகும். [இ-எ]

## சிரிக்க வைத்த ரணிலின் குறிப்பு

கொழும்பு, பெப். 15

பிரதிநிதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தசமயம்— இடதுசாரி தொடர்புடைய அமைச்சர் ஒருவரின் கைக்கு குறிப்பு ஒன்று கிடைத்தது. அதனை வாசித்த அமைச்சர், தனது உணர்வை அடக்க முடியாமல், வாய்விட்டுச்சிரித்து விட்டார்.

அந்தக் குறிப்பில் 'இது என்ன பைத்தியக்காரத்தனம்'' என்று எழுதப்பட்டிருந்தது.

அதனை எழுதியவர் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா ஆவார். (இ-எ)

## ஜூனில் தேர்தல் நடத்தப்படலாம்

### சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

எதிர்வரும் மே மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தேர்தல் திணைக்களம் தயாராகி வரும் வேளையில் ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

அரசு தனது பெரும் பான்மைப்பலத்தை அதிகரிக்கவும் அதன் மூலம் அரசமைப்பு சீர்திருத்தங்களை நிறைவேற்றவும்— நாடாளுமன்றத்துக்கு புதிய தேர்தல் நடத்தப்படக்கூடும் என்று ஜனாதிபதி சந்திரிகா கடந்த வாரம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருந்தார்.

அப்போதே அவர் ஜூன் மாதம் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் குறித்துத் தெரிவித்தார்.

மேமாதம் கடைசிப்பகுதியில், மாநகர, நகர மற்றும் பிரதேசசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படலாம் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஒழுங்குகளில் தேர்தல் திணைக்களம தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்ட ஆணையாளர்— திடீர் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற செய்தி பற்றி கருத்து வெளியிட மறுத்து விட்டார் என்று சண்டே ரைமஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## ஐக்கிய இலங்கைக்குள் பொருத்தமான ஒரு தீர்வு

### லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்

ஜெனிவா, பெப். 15

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஐக்கிய இலங்கையினுள் பொருத்தமான அரசியல் கட்டமைப்பு ஒன்றை அரசாங்கம் உருவாக்கும்.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வெள்ளிக்கிழமை ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 51 ஆவது கூட்டத்தில் பேசிய போது முன் கண்டவாறு கூறினார்.

மனித உரிமை மீறல்களில் எவர் ஈடுபட்டாலும் அரசாங்கம் அதனைப் பொறுத்துக் கொள்ள மாட்டாது என்றும் அவர் கூறினார். (இ-எ)

## வரதராஜப் பெருமாள் நாடு திரும்ப விருப்பம்

### சந்திரிகாவுக்கு கடிதம்

வடக்கு — கிழக்கு மாகாண முன்னைநாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் மீண்டும் இலங்கை வர விருப்பம் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதம் அனுப்பி உள்ளார்.

1991 இல் இந்திய ராணுவம் இலங்கையில் இருந்து வெளியேறியது முதல் இந்தியாவில் இவர் தங்கி உள்ளார்.

தற்போது இவர் இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் வசித்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மத்திய அரசாங்கம் இவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளது. (இ 5)

### பாகிஸ்தான் டெஸ்டில்

## அலன் போடருக்கும் லஞ்சம் வழங்க முயன்றனராம்!

### அவரே வெளியிடும் தகவல்

சென்னை, பெப். 15

ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணிவீரர்களுக்கு பாகிஸ்தானில் லஞ்சம் வழங்க முயற்சி எடுக்கப்பட்ட சம்பவத்தை ஆஸ்திரேலிய அணித்தலைவர் அலன் போர்டர்களும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்.

1993 இல் பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியைத் தோல்வியுறச் செய்ய வைக்குமாறு கோரி, தமக்கு 10 லட்சம் டொலர் லஞ்சம் தர சிலர் முயன்றதாகவும்—

தாம் அதை நிராகரித்து விட்டதாகவும் அலன் போடர் தெரிவித்திருக்கிறார்.

டெஸ்ட் ஆட்டங்கள் தொடர்பான பந்தய (''பெட்டிங்'') கம்பனி ஒன்றின் சார்பிலேயே தமக்கு லஞ்சம் தர முயற்சி எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (உ)

## கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

கல்வியியல் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னர் விண்ணப்ப முடிவு திகதி பெப்ரவரி 10 என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இம்முறை போட்டிப் பரீட்சையின் மூலமாக அல்லாமல் ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கப்படவுள்ளனர்.

பரீட்சைத் திணைக்களத்தினால் புள்ளிகள் ஒன்று சேர்க்கப்பட்டதன் பின்னர் மாணவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு சமுகமளிக்க வேண்டும்.

மார்ச் 20- ஏப்ரல் முதல் வாரம் வரை இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும் என வவுனியா கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மீன் பிடிக்கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படும்

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 15

மீன் பிடிப்பது தொடர்பான கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட விருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. பாலபட்டபெண்டி தெரிவித்திருக்கிறார்.

'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அளித்த தகவலில் மீன் பிடித் தொழிலை நம்பி பெரும் எண்ணிக்கையானவர்கள் இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மோதல் தவிர்ப்பு நிலை குறித்து விடுதலைப் புலிகள் நடந்து கொள்ளும் விதம் அரசுக்குத் திருப்தி தருவதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பூநகரி ராணுவ முகாம் இருப்பது தொடர்பான தங்கள் கோரிக்கை குறித்து விடுதலைப் புலிகள் தங்கள் கருதியைக் குறைத்துள்ளனர். என்றும்திரு. பாலபட்டபெண்டி தெரிவித்தாக 'சண்டே லீடர்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### வடக்கு - கிழக்கு

## மாகாணசபை அதிகாரியின் மனைவி லஞ்ச வலையில்

யாழ்ப்பாணம், பெப் 15

வடக்கு — கிழக்கு மாகாண சபையின் உயரதிகாரி ஒருவரின் மனைவி லஞ்சம் வாங்கியதாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிலுவைப் பணத்தை வழங்குவதற்காக கந்தளாயைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரிடமிருந்து இவர் 10 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பிரதம நீதிவான் இப்பெண்ணை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ)

## லலித் உயிருடன் இருப்பின் அவரே இன்று ஜனாதிபதி

### ஸ்ரீமனி சொல்கிறார்

கொழும்பு, பெப். 15

லலித் அத்துலத்முதலி உயிருடன் இருப்பின் அவரே இன்று நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருப்பார்.

[illegible] அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிரேமதாஸா ஜனாதிபதியாக பதவி ஏற்றதன் பின்னர் பெரும்பாலான ஐக்கிய தேசியக் கட்சியினர் லலித்தையே ஆதரித்து வந்தனர் என்றும் அவர் கூறினார்.

லலித்தை கொல்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு எதுவித காரணமும் இல்லை. லலித் கொலைக்கு பின்னால் அப்போதைய அரசுதான் இருந்தது என்று இன்னும் நான் எண்ணுகின்றேன். லலித்தின் கொலைக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பல்லர் என்றும் அவர் கூறினார் (இ-எ)

## யாழ். நூலகத்துக்கு பெறுமதி மிக்க புத்தகங்கள்

### கொழும்பு மாநகரசபை வழங்கும்

கொழும்பு, பெப் 15

யாழ். பொது நூலகம் புனரமைக்கப்பட்ட பின்னர் அதற்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை கொழும்பு மாநகரசபை அன்பளிப்புச் செய்யவிருக்கின்றது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றை கொழும்பு மாநகர சபை தனது கடந்த கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பான பிரேரணையை லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர் விமல் காமினி ரொட்ரிகோ முன்மொழிந்தார்.

ஜனநாயகத்தைக் கைவிட்டு துப்பாக்கியை தமிழ் இளைஞர் தூக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே வழி காட்டியது. நாட்டில் இடம்பெற்ற மிகப்பெரிய துக்ககரமான சம்பவங்களில் யாழ் நூலகம் எரிப்பும் ஒன்றாகும் என்று திரு. ரொட்ரிகோ அப்போது தெரிவித்தார்.

ஆசியாவின் சிறந்த நூலகங்களின் ஒன்றான யாழ். நூலகம் பெரும் சொத்தாகும் இந்த நூலகத்தை மீண்டும் கட்ட தேசிய நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி உறுப்பினர் சுனில் ஆனந்த விதானகே பிரேரணையை வழிமொழிந்தார். (இ-எ)

# ஐ. தே. க. அதிருப்தி எம். பிக்கள் அரசாங்கத்தில் சேருவதற்கு முயற்சி

### அமைச்சர் பீரிஸை சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, பெப். 15

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள 'அதிருப்தி' எம். பிக்கள் குழுவின் தலைவர் இன்று புதன்கிழமை காலை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸைச் சந்திக்கக் கூடும்.

கொழும்பு அரசியல் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

ஐ தே.க. நாடாளுமன்றக் குழுவில் உள்ள எம்.பிக்களில் சுமார் 20 பேர் இந்த அதிருப்திக்குழுவில் உள்ளனர் என்றும்—

இக்குழுவின் தலைவர் பேராசிரியர் பீரிஸை ராஜகிரியாவில் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் உதவியுடன் கடந்த வாரம் சந்திக்க திட்டமிட்டிருந்தார் என்றும் —

தம்மை தமது கட்சியில் உள்ள 'எதிரிகள்' கண்காணித்து வருவது தெரிந்தும் அவர் அச்சந்திப்பை ரத்துச் செய்து விட்டார் என்றும் தெரியவருகிறது.

இவ்விஷயம் குறித்து ஜனாதிபதி பரிசீலனைசெய்து வருவதாகவும்—

அவர் அங்கீகாரம் வழங்கியதும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், அதிருப்திக் குழுத் தலைவரை இன்று காலை சந்திக்க உள்ளார் என்றும்— 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது. (இ-எ)

## விலக முயலும் 20 எம். பிக்களை தடுக்கும் முயற்சியில் ஐ. தே. க.

கொழும்பு, பெப் 15

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சுமார் 20 எம் பிக்கள் விலகுவதைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஆதரவளிப்பதில்லை என்று ஐ. தே. க. தலைமைப்பீடம் [illegible] செய்ததே இந்த எம்.பிக்கள் கட்சியை விட்டு வெளியேறத் தீர்மானித்தனர் என்றும் —

இப்போது தலைமைப் பீடம் தனது முடிவை மீள் பரிசீலனை செய்வதாக அறிவித்திருப்பதை அடுத்து, ''அதிருப்தி'' எம். பிக்களில் சிலர் வெளியேறும் முடிவை கைவிடுவது பற்றி ஆலோசித்து வருவதாகவும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஐ. தே க. அரசு ஆதரவளிக்கும் பட்சத்தில் 20 எம்.பிக்களும் கட்சியை விட்டு வெளியேறமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — இந்த அதிருப்திக்குழு தாம் தற்போது வெளியிடும் ''பெரலிய'' சஞ்சிகையை தொடர்ந்து வெளியிடவும் தீர்மானித்திருக்கிறது. (இ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

15 — 02 — 1995

**புதன் இரவு**

- ★ 8-01 — குயிலோசை— நிகழ்ச்சியில் தமிழ்க்கவி எழுதிய ''பிரிவும் பெருமையும் தந்தவரலாறு''
- ★ 8-20 — ஏர்முனை— நிகழ்ச்சியில் ''நெல்லில் கொடூரமான நோய்'' கேள்வி பதில்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம்— சிவசக்தி எழுதிய 'மானம்'
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

16 — 02 — 1995

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்
- ★ 5-40 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின்தொடர்ச்சி
- ★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## இலைக்கஞ்சி

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக —போசாக்கு மையம், இப்பகுதியிலுள்ள 5 வயதுக்கு உட்பட்ட போசாக்கு குறைந்த சிறார்களைத் தெரிவு செய்து இலைக் கஞ்சி வழங்கி வருகின்றது.

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை முருகேசு

[காரைநகர்]

காரைநகர் மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது குலத்தலை வீதி, கட்டுடை மானிப்பாயில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை முருகேசு நேற்று [14-2-95] செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வள்ளிநாயகி [தேவி], யோகேந்திரன், தெய்வேந்திரன், நடராசா, ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவசோதி (கனடா), அமுதலட்சுமி, நேசமலர், தேவரஞ்சி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் [14-2-95] நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் பிப்பிலி மயானத்தில் இடம்பெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. தெய்வேந்திரன்
[மகன்]

[சி/563]

## வேலுப்பிள்ளை ஜெயதேவி

(ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி)

காரைநகர், பலுகாட்டைச் சேர்ந்தவரும் யாழ். கச்சேரி ஓய்வுபெற்ற கணக்காளருமான வேலுப்பிள்ளை கமலாதேவி தம்பதிகளின் மூத்த புதல்வி ஜெயதேவி கொழும்பில் காலமானார்.

இவர் அம்பிகாதேவி [அவுஸ்திரேலியா], ஆனந்தவேல், கலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரஞ்சோதி [அவுஸ்திரேலியா], அவர்களின் மைத்துனியும் கந்தசாமி, காலஞ்சென்ற மகாதேவன், ஜேகேஸ்வரன், தர்மராஜா ஆகியோரின் பாசமிகு மருமகளும் சரோஜினிதேவி பொன்னம்பலம், புஸ்பதேவி வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பெறாமகளுமாவார்.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் இன்று [15-2-95] நடைபெறும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருவாதர் கந்தசாமி
[மாமனார்]

26A புகையிரத நிலையவீதி,
கொக்குவில்.

[சி/562]

## திருமதி செல்லையா இளையாச்சி

அளவெட்டி வடக்கு கூத்தஞ்சீமாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை செல்லையா அவர்களின் அருமை மனைவியுமான திருமதி இளையாச்சி செல்லையா அவர்கள் (14-2-95) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் ஓய்வுபெற்ற சமநேர உரை பெயர்ப்பாளர் (நாடாளுமன்றம்), செ. குமாரசாமி, காலஞ்சென்ற சோதிப்பிள்ளை, பராசக்தி ஆகியோரின் அருமைத் தாயாரும், செ. அப்பாத்துரை, சிந்தாமணி, யோகேஸ்வரன் ஆகியோரின் அருமை மாமியாரும், சரோஜாமலர், ஆலாலசுந்தரம், சரவணபவன், பாலசௌரி, நித்தியானந்தன், கோகுலரமணி (பிரான்ஸ்), நீலலோசனி, விஜயநாதேஸ்வரன் (ஜேர்மனி), உதயகுமார் - கமலாதேவி (ஜேர்மனி), சிவகுமார் - மேகலா (பிரான்ஸ்), மைதிலி - பராபரன் (U K.), வாசுகி (இராமநாதன் நுண்கலைப்பீடம்), கபிலை ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15 2.95) புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அம்மன் கோவில் வீதி, கொக்குவில் இல்லத்தில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
ப. யோகேஸ்வரன்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(35211)

## முருகேசு இராசா

[இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி தெற்கு]

அச்சுவேலி தெற்கு இளைப்பாறிய ஆசிரியர் அருமையர் முருகேசு இராசா காலமானார்.

இவர் திருமதி பருவதம் இராசா அவர்களின் அன்புக் கணவரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி கிளை முகாமையாளர் சண்முகலிங்கம், திருமதி சமலாதேவி, தர்பலிங்கம், கிராமசேவையாளர் அச்சுவேலி தெற்கு கணேசலிங்கம், பெருந் தெருக்கள் அதிகாரசபை வவுனியா ஆராய்ச்சி உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்தையா தர்மலிங்கம் [இளைப்பாறிய பொறியியல் வல்லுனர் பெருந்தெருக்கள் திணைக்களம் வவுனியா], திருமதி விமலேஸ்வரி, திருமதி இந்திராதேவி கணேசலிங்கம், திருமதி கோகிலாதேவி சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் முருகேசு வைத்தியலிங்கம் அவர்களின் சகோதரரும் சுபாஜினி, சஜனி, வனோஜினி, செந்தில்குமார், ஜெயக்குமார், மாலினி, சிஜேந்திரகுமார், பாமினி, ஷாமினி, பிரணவன் ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று [15-2-95] புதன்கிழமை பி. பகல 2 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
இ. கணேசலிங்கம்
(கிராம சேவையாளர்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

[35215]

## செல்வன் சயந்தன் கணேசலிங்கம்

அராலிதெற்கை பிறப்பிடமாகக் கொண்ட கணேசலிங்கம் சயந்தன் அகால மரணமடைந்ததர்.

இவர் கணேசலிங்கம், [உரிமையாளர் சத்தியா ஸ்ரோஸ்] சத்தியபாமா தம்பதிகளின் அன்பு மகனும் தர்சினி, தயாளன், தயாழினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், A S ராமலிங்கம் தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 15-2 95 புதன்கிழமை 9. 00 மணியளவில அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்
A. S இராமலிங்கம்

அராலி தெற்கு.
அராலி.

[35220]

## கூடைப்பந்தாட்ட போட்டிகள்

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை, யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3.30 மணி: உதயன் வி. க. அணி எதிர் ஜொனியன்ஸ் அணி.

★ 4. 30 மணி: சென்றலைட்ஸ் வி. க. அணி எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி அணி.

### அரசுக்கு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டி மெல் கூறியிருக்கிறார்.

றொனி டி மெல்லுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நியமித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### தேசியத்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளார்.

யாழ்ப்பாணம் வருவதற்கு எமக்கு அனுமதி வழங்குமாறும் —

சமாதானம் தொடர்பான செய்தியை தங்களிடம் ஒப்படைப்பதற்காக தங்களைச் சந்திப்பதற்கு வாய்ப்புத் தரும்படியும் —

திரு. பிரபாகரனுக்கு நாம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம்.

இதனை ஏற்றுக் கொண்ட திரு. பிரபாகரன், எமக்கு அனுமதி வழங்கியுள்ளார் — இவ்வாறு வாசுதேவ மேலும் தெரிவித்தார்

### இசைவிழாவில்---

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாளையதினம் நிகழ்வில் வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திரு து. வைத்திலிங்கம் பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

திரு. த. அன்னலிங்கம், திரு சே வேல்முருகன், திரு. சே செல்வநாயகம், திரு. இ. பாலா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க சிவஸ்ரீ சாம்பசிவ சோம சபேசக் குருக்கள் அருளுரை வழங்குவார்.

வர்த்தக சங்க சமாசத்தின் தலைவர் திரு. த கோவிந்தசாமி சிறப்பு அதிதியாக கலந்து கொள்வார்.

### மோதல்---

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று மாத காலத்துக்குள் இந்த புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

வடக்கு, கிழக்கில்

## இடம்பெயர்ந்தோர் பற்றி மதிப்பீடு செய்ய முயற்சி

வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் பற்றி மதிப்பீடு ஒன்று எடுக்கப்பட உள்ளது.

இந்த மதிப்பீட்டில் உலர் உணவுப் பொருள்கள், அரச நன்கொடைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வோரினதும் விபரங்கள் சேகரிக்கப்படும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் பணிப்பின் பேரில் நேற்று முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை மதிப்பீடு செய்யும் வேலைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## எய்ட்ஸ் நோயாளிக்கு கொழும்பில் "ஒப்பரேஷன்"

### நோய் தொற்றுமென அச்சம்

கொழும்பு, பெப். 15

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கடந்த புதன்கிழமை எய்ட்ஸ் நோயாளி ஒருவர் அறுவைச் சிகிச்சைக்கு (ஒப்பரேசன்) உட்படுத்தப்பட்டதினால் ஏனையோருக்கும் அந்த நோய் தொற்றும் ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோயாளி அறுவை சிகிச்சை செய்யப்பட்ட விஷயத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகம் கவனயீனமாக நடந்து கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டை ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் ஒலிவர் பெர்னாண்டோ மறுத்துள்ளார்.

அந்த அறுவைச் சிகிச்சை ஆஸ்பத்திரி ஒழுங்கு விதிகளின்படியே நடத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

கள் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய சிவல் தொழிலாளி ஒருவர் அம்மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமானார்.

அளவெட்டி தெற்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த நன்னியர் கந்தையா (வயது 70) என்ற வயோதிபரே இறந்தவராவார்.

படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய சிலமணி நேரத்தில் அங்கு மரணமானார். (உ-13-15)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், பெப். 15

நல்லூர் ஆடியபாதம் வீதி, ஸ்ரீ வாலையம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை எட்டு மணிக்கு நடைபெறும். தீர்த்தோற்சவம் நாளை காலை நடைபெற்று, மாலை 6 மணிக்கு அம்பாள் தெரு உலா வருவார். (அ)

★ ★ ★

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ பூதநாத சுவாமி வருடாந்த தெரு உலா உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். காலையில் விஷேட அபிஷேகமும், பிற்பகலில் உற்சவ பூசையும் இடம்பெறும். (அ)

## வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் இவ்வருடத்துக்கான வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இது வரை சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்ற வகுப்புகளில் பலவற்றை கிழமை நாட்களில் மாலை வேளைகளில் நடத்த உத்தேசித்துள்ளதாகவும் இதன் மூலம் வகுப்பறைகளுக்கு நிலவும் பற்றாக்குறையை ஓரளவு நீக்க முடியும் என்று அதிபர் திரு க. ஜெபரட்னம் கருத்துத் தெரிவித்தார். [அ]

## யுத்தநிறுத்தம் அறிவித்தது பெரு

பெரு, பெப் 15

பெரு அரசாங்கம் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது

இதன் மூலம் ஈகுவடோருடன் நடைபெற்ற 19 நாள் யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

சகோதர நாடுகள் மத்தியில் இரத்தக்களரி மேலும் ஏற்படுவதை தடுப்பதில் ஈகுவடோரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு பெருநாட்டின் ஜனாதிபதி ஈகுவடோரை கேட்டுள்ளார்.

## "சோசலிச" என்ற...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

"சோஷலிசம் என்ற வார்த்தை இருக்கட்டும். அதனை அகற்ற முடியாது" - என்று கூறினார்.

"இந்த மாதிரி எப்படி ஒரு நாட்டின் பெயரை நான் மாற்ற முடியும்?" - என்று சந்திரிகா சுற்றி நின்றவர்களிடம் கேட்டார்.

இத்தகவலை "சண்டே டைம்ஸ்", "சண்டே லீடர்" ஆகிய பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. [இ-எ]

## உங்களை நெஞ்சம் மறக்குமோ?



அமரர்
கதிரவேலு
தெய்வேந்திரம்
(முன்னாள் நெற்சந்தைப்படுத்தும் சபை ஊழியர்)
(முன்னாள் சிறிபாலமுருகன் பா புத்தகக்கடை உரிமையாளர்)

மண்ணில்: 23-08-1948
விண்ணில்: 31-08 1993



அமரர்
தெய்வேந்திரம்
ரவீந்திரன்
இணைக்கப்பட்ட பல்கலைக் கழகம் வவுனியா-1ஆம் வருட மாணவன்)
(H N.D.A யாழ். தொழில்நுட்பக் கல்லூரி 2ஆம் வருட மாணவன்)
(நொதேர்ன் கல்வி நிறுவன ஆசிரியர்)

மண்ணில்: 11 02-1971
விண்ணில்: 26-02-1994

தரணியிலே எம்மை தவிக்கவிட்டு நீங்கள் சென்று
ஒரு இரு ஆண்டுகள் கழிந்ததைய —
படிக்கவென சென்று பாதியில் உன்உயிர் பிரிந்தும்
ஆண்டு ஒன்று ஆனது.
உங்களின் நினைவில் என்றும் வாழ்ந்திடுவோம்.

36/4, பழையபூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(35214)

## யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டதாரிப் பிரிவு

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உயர்தரப் பிரிவுகளுக்கான
கணக்கியல் விரிவுரைகள்

A/L 95 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கிய கணக்கியல் விசேட விரிவுரைகள்.

ஆரம்பம்: 15 - 02 - 1995
மாலை 3 மணி

விரிவுரை:
திரு. V. உருத்திரசிங்கம்
B. Com. (Cey.)

குறிப்பு:
(i) ஒவ்வொரு புதன்கிழமையும் 3 — 5 வரை இவ்விரிவுரை நடைபெறும்.

– இயக்குநர்.

[சி-551]

# மரண அறிவித்தல்கள்

## அன்ரனி பீற்றர்சன்

முன்னாள் புகையிரத ஊழியரும் 1/6, பேக்கரி ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் முதலில் வசித்து தற்போது 509, அருச்சுனா வீதி, [ஸ்ரான்லி வீதி] யாழ்ப்பாண முகவரியில் காலமான இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வலக்ஷ்மி, நவரட்னராஜா, நகுலேஸ்வரன் [கொழும்பு], ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகுமார், ஜெயகுமார், டிலூசினி, கீதப்பிரியா, பாலதர்ஷினி ஆகியோரின் பேரனும், சாந்தி, ரெபேக்கா [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [15-2-95] பி. ப. 3 00 மணியளவில் 509, அருச்சுனா வீதி இல்லத்தில் நடைபெறும். என்பதனை இத்தால் உறவினர்கள் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
அன்னம்மா (மனைவி)

(35212)

## திருமதி ரெத்தினம் றெஜீனா தேவசகாயம்

திருமதி ரெத்தினம் றெஜீனா தேவசகாயம் அவர்களின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று புதன்கிழமை (15 02-95) பி. ப. 3 மணிக்கு அன்னாரின் இல. 21 பிரதான் வீதி, (றக்கா வேன்) கண்டிக்குளி இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பா. புஸ்பராணி
[மகள்]

[35216]

## கந்தையா அழகரத்தினம்

தெல்லிப்பழை – பன்னாலையைப் பிறப்பிடமாகவும், தற்போது இணுவில் மேற்கு கந்தசுவாமி கோயிலடியில் வசித்து வந்தவருமான கந்தையா அழகரத்தினம் நேற்றிரவு காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் (உரும்பராய்), சிவராசா (கைதடி வடக்கு), செல்வராசா (இணுவில்), செல்வரத்தினம் (ஜேர்மனி), இராசலட்சுமி (இணுவில்) தவமணி (சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தை ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவிலில் வசிக்கும் அவரின் புதல்வர் செல்வராசாவின இல்லத்தில் இன்று [15-2-95] முற்பகல் 12 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகரன் [சிவா]
[பேரன்]

[35221]

## தியாகராசா அரசரட்ணம்

[முன்னாள் இ. போ. ச. சாரதி]

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த தியாகராசா அரசரட்ணம் நேற்றிரவு காலமானார். இவர் காலஞ்சென்ற தியாகராசா செல்லம்மா தம்பதிகளின்மகனும்,ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ஆதவன் [நோர்வே], ஆனந்தி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி [நோர்வே], தேவராசா [யாழ். மாநகர சபை — மின்சாரப் பகுதி] ஆகியோரின் அன்பு மாமனாரும், சரணியா, கபில்தேவ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை, மற்றும் கமலாம்பிகை, லீலாவதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [15-2-95] நன்பகல் 12 மணியளவில் அவரது இலலத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
தேவராசா
[மருமகன்]

காளுவன்,
சுழிபுரம்.

[35222]

## OBITUARY

### Mrs Felicitus Selladurai

Mrs Felicitus Selladurai beloved wife of late J. S B. Selladurai (Teacher, St. Patricks College) expired on (14 - 02 - 1995) yesterday. Funeral arrangements will be notified later.

Informer:
Dharma Pillainayagam
[Daughter]

56, Chapel Street,
Jaffna.

(35217)

இப்பத்திரிகை உதயன் நியூ பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் தாவலர் வீதி, [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org